**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் - O.S.No.1/2014 P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.எஸ்.மோகன், என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873-ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | அருள்மிகு ஆஞ்சநேயசாமி திருக்கோவில் தக்கார்/நிர்வாக அதிகாரி நிலை.2.திரு.சக்தி | த/பெ.: | |
| தொழில்: | | மதம்: | |
| கிராமம்: | | ஜாதி: | |
| வயது: | | வட்டம்: காஞ்சிபுரம் | |

**முதல் விசாரணை: - 06.09.2018**

நான் இந்த வழக்கில் வாதி தரப்பில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். அருள்மிகு ஆஞ்சநேயசாமி திருக்கோவில் தக்கார். அருள்மிகு ரங்கநாதசுவாமி திருக்கோவில், திருநீர்மலையின் நிர்வாக அதிகாரி நிலை 2 ஆக பணியாற்றுகிறேன். வழக்குரையுடன் 12 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. மனு மூலம் கூடுதலாக 4 ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேன். இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். ஆவணங்கள் குறியீடு செய்ய அவகாசம் வேண்டுகிறேன்.

(ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி முதல் விசாரணை பகுதியாக நிறுத்தி வைக்கப்படுகிறது).

**O.S.No.1/2014 P.W.1-.திரு.சக்தி 08.02.2019**

**முதல் விசாரணை தொடர்ச்சி:-**

வாதி ஆஜர். ஏற்கனவே இவ்வழக்கில் 06.09.2018 அன்று பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, முதல் விசாரணை பகுதியாக பதிவு செய்யப்பட்டது. தற்போது கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்திருக்கிறேன். அதை முதல் விசாரணை தொடர்ச்சியாக பதிவு செய்ய வேண்டுகிறேன். கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் 14 ஆவணங்கள் குறிப்பிட்டிருக்கிறேன். அதனை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. பட்டா ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.1.
2. சிட்டா ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.2.
3. Extract of field survey Register ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.3.
4. கடிதம் ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.4.
5. கடிதம் ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.5.
6. Copy of Letter வா.சா.ஆ.6.
7. Copy of Complaint வா.சா.ஆ.7
8. 10.12.2013 தேதியிட்ட Receipt வா.சா.ஆ.8
9. Copy of Representation வா.சா.ஆ.9.
10. Guide line value வா.சா.ஆ.10.
11. கிரய பத்திர எண்.1222/1933 வா.சா.ஆ.11.
12. G.O.Ms.No.260 Tourism, Culture and Religious Endowments Department (RE4-2) dt:06.11.2015 வா.சா.ஆ.12.
13. 30.11.2013 தேதியிட்ட பொது அறிவிப்பு வா.சா.ஆ.13.
14. 23.03.1999 தேதியிட்ட Proceedings of Special Commissioner, H.R. & C.E. Department, Chennai-34 வா.சா.ஆ.14.

(வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சில ஆவணங்கள் வருவாய் துறையில் இருந்து பெறப்படாமல் அறநிலைய துறை இணை ஆணையரால் கையொப்பமிடப்பட்டு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால், நகல்கள் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்து 1 முதல் 14 ஆவணங்களுக்கும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை:**

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

<u>முதல் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். தாவா சொத்து கோவிலுக்கு சொந்தமானது. அந்த சொத்தில் கட்டப்பட்டுள்ள கட்டுமானத்தை அகற்றி சொத்தின் சுவாதீனம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் வாதி கோவிலின் நிர்வாக அதிகாரியாக பணியாற்றுகிறேன். வாதி கோவில் அருள்மிகு ஆஞ்சநேயசாமி திருக்கோவில். தாவா சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் கோவில் அலுவலகத்தில் தான் இருக்கும். நான் அருள்மிகு ரங்கநாதர் திருக்கோவில் திருநீர்மலை கோவிலில் நிர்வாக அதிகாரியாக பணியாற்றுகிறேன். அந்த கோவிலின் நிர்வாகத்தின் கீழ் வரும் 14 உள்கோவில்களுக்கும் நான் தான் நிர்வாக அதிகாரி. அந்த 14 உள்கோவில்களில் ஒன்று தான் வாதி கோவிலான அருள்மிகு ஆஞ்சநேயசாமி திருக்கோவில். என்னுடைய பணி நிமித்தமான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. அந்த 14 உள்கோவில்களுக்கும் நான் தான் நிர்வாக அதிகாரி என்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. முதல் பிரதிவாதி கோவில் நிர்வாகத்தின் மீது தாக்கல் செய்த வழக்குகள் பற்றி தெரியுமா என்றால் RCOP வழக்கு பற்றி தெரியும். அந்த RCOP வழக்கு ஆலந்தூர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. அதன் தற்போதைய நிலை பற்றி எனக்கு தெரியாது. அந்த RCOP வழக்கில் இதே கோவில் சார்பாக வேறொரு நிர்வாக அதிகாரி வந்து சாட்சியம் அளித்திருக்கிறார் என்றால் அது சரியல்ல. குமரேசன் என்பவர் வாதி கோவிலில் எனக்கு முன்பாக இருந்த நிர்வாக அலுவலர். நான் இந்து சமய அறநிலைய துறையின் கீழ் பணியாற்றுகிறேன் என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறேன். வாதி கோவில் சுமார் 200 ஆண்டுகளாக இருக்கிறது.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

**முதல் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

எனக்கு இந்த வழக்கு விவரங்கள் தெரியுமா என்றால் ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். நான் எந்தெந்நத கோவிலுக்கு E.O ஆக இருக்கிறேன் என்றால் நான் தற்போது பெசன்ட் நகரில் உள்ள அஷ்டலட்சுமி கோவிலுக்கு E.O ஆக உள்ளேன். நான் கோவில் நிர்வாக அதிகாரியாக இருக்கிறேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த திருக்கோவில் சார்பாக வழக்கு தொடுப்பதற்கு அதிகாரம் வழங்கபட்டுள்ளதா என்றால் வழங்கப்பட்டுள்ளது. வழக்கு சொத்து எங்குள்ளது என்றால் ஈசா பல்லாவரத்தில் உள்ளது. வழக்கு சொத்தின் சர்வே எண் என்னவென்றால் பழைய சர்வே எண்.87/2, புதிய டவுன் சர்வே எண்.77 ஆகும். பிரதிவாதிகள் இருக்கும் சர்வே எண்தான் நான் சொல்லிய சர்வே எண் என்றால் அதே சர்வே எண்ணில்தான் முதல் பிரதிவாதி இருக்கிறார். கோவிலின் பெயர் என்னவென்றால் அருள்மிகு ஆஞ்சநேயர் ஸ்வாமி திருக்கோவல் ஆகும். கோவில் உள்ள இடம் ஈசா பல்லாவரம். திருக்கோவிலை யார் முதன் முதலில் நிர்வாகம் செய்தார் என்றால் வழக்கு சொத்தை ராமய்யா செட்டியார் கோவிலுக்கு தானமாக கொடுத்து, கமிட்டி அமைத்து அதன்மூலம் கோவிலை நிர்வாகம் செய்து வந்தார். என்ன சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் எனக்கு தெரியாது. எதன் அடிப்படையில் இந்து சமய அறநிலைய துறையில் நிர்வாக அதிகாரியை நியமிப்பார்கள் என்றால் சட்டம் ஒழுங்கு பிரச்சனை வரும்போது நிர்வாக அதிகாரியை நியமிப்பார்கள்.

(முதல் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)